**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 245/2023 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. செந்தில்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.09.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலைச் செய்து வருகிறேன். குளச்சல் மதனாவிளையில் உள்ள ஸ்ரீமன்நாராயண சுவாமிகோவிலில் பூஜைச் செய்து வருகிறேன். 18.04.2022 ம் தேதி பூஜை முடித்து விட்டு கோவிலில் படுத்து தூங்கிவிட்டேன். அதிகாலை 04.30 மணி அளவில் சல சல என்று சத்தம் கேட்டது. நான் எழும்பி பார்க்கும்போது கோவிலில் இருந்து 22 வயது மதிப்புடைய ஆண் நபர்ஓடுவது தெரிந்தது. கோவிலில் சென்று பார்த்த போது ஒன்றரை பவுன் எடையுள்ள 4 நெக்லஸ்ம் காணாமல் போய்விட்டது. இது சம்மந்தமாக குளச்சல் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

**1.** நான் மேற்படி கோவிலில் 4 வருடங்களாக பூசாரியாக இருந்து வருகிறேன். மேற்படி திருவிழாவிற்கு நாங்கள் காவல்துறையினரிடம் அனுமதி பெற்றோமா என்றால் பெற்றோம். எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை திருவிழாநடத்திக் கொள்ளலாம் என்று சொன்னார்களா என்றால் அவ்வாறு எல்லாம் சொல்லவில்லை. 10, 11 மணிக்கெல்லாம் முடிந்துவிடும். ஞாயிற்றுகிழமை , திங்கட்கிழமைகளில் அதிகாலை 02.00 மணி வரை நடக்கும். மேற்படி நகைகள் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது. யார்

கொடுத்தார்கள் என்று தெரியாது. நான் பூசாரியாக செல்வதற்கு முன்பே அங்கு இருக்கிறது. எத்தனை பவுன் நகை என்று எடை போட்டு பார்க்கவில்லை. அது கவரிங்கா தங்கமா என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எனக்கு முன்பு பூசாரியாக இருந்தவருக்கு தான் அது தெரியும்.

2. 19ம் தேதி எத்தனை மணிக்கு உறங்கினேன் என்றால் 04.00, 04.30 மணி இருக்கும். லைட் எல்லாம் அணைத்து விட்டு தான் உறங்கினேன். நாங்கள் 3 பேர்கள் உள்ளே இருந்தோம். பூசாரிக்கும் ஆலயத்தில் உள்ள சிலைகளுக்கும் கணவன் மனைவி உறவு உண்டு என்று சொன்னால் சரிதான். என்னை தனிப்பட்ட முறையில் போலீசார் விசாரித்தார்களா என்றால் ஆம் என்னை மட்டும் தான் விசாரித்தார்கள். நகையை நான் திருடியதாக என்னிடம் கேட்டார்களா என்றால் இல்லை.

3. எனக்கு பார்வை கம்மிதான், மங்கலாக தான் தெரிகிறது. நான் 2.30 மணிக்கு தூங்க செல்லவில்லை, அவ்வாறு சொல்லப்பட்டிருந்தால் அது தவறு. சத்தம் கேட்டு எழுந்து பார்த்தேன். அப்போது ஒரு ஆம்பிள்ளை ஒடினார். மொத்தம் 4 நெக்லஸ், 6 பவுன் உண்டு. அதில் 3 பவுன் தான் காவல்நிலையத்தில் கொடுத்தார்கள். மீதம் உள்ள 3 பவுன் அங்கேயே இருந்தது. புகார் தரும்போது மேற்படி சங்கதிகளை நான் சொல்லவில்லை, 2வதாக தான் சொன்னேன். நான் எந்த பெண்ணையும் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் ஒரு ஆணை மட்டும் தான் பார்த்தேன். பெண்ணைப் பார்க்கவில்லை.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.